தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
*******

ஆணை எண். 94/ந/2022
நாள். 30.10.2022

G.சக்திவேல்சாமி,
புளியங்குடி,
தென்காசி மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்.

ஆணையாளர்,
புளியங்குடி நகராட்சி,
தென்காசி மாவட்டம். – எதிர் மனுதாரர்

தென்காசி மாவட்டம், புளியங்குடி, T.N.புதுக்குடி, அரசடி விநாயகர் கோவில் தெரு, கதவு எண்.89 என்ற முகவரியில் வசிக்கும் திரு.G.சக்திவேல்சாமி, என்பவரின் 30.06.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 04.07.2022 அன்று பெறப்பட்டு 094/ந/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

தென்காசி மாவட்டம், புளியங்குடி, T.N.புதுக்குடி, அரசடி விநாயகர் கோவில் தெரு, கதவு எண்.89 என்ற முகவரியில் வசிக்கும் திரு.G.சக்திவேல்சாமி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

"தென்காசி மாவட்டம், புளியங்குடி பேருந்து நிலையம் அருகிலுள்ள முப்புடாதிஅம்மன் கோவில் தெருவில் தரமற்ற கழிவுநீர் வாறுகால் அமைக்கப்பட்டதால், டிராக்டர் டிரைலர் வாகனம் கவிழ்ந்து விபத்து ஏற்பட்டு பெண்மணி ஒருவர் படுகாயம் அடைந்ததாக புகாரில் தெரிவித்துள்ளார். இதுகுறித்து 24.08.2020 தேதியிட்ட பத்திரிகையிலும் செய்தி வெளியிடப்பட்டுள்ளது. இப்புகார் குறித்து புளியங்குடி நகராட்சிக்கும், திருநெல்வேலி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கும் மனு அளித்தும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. இவ்வாறு தரமற்ற வாறுகால் அமைக்கப்பட்டதை கண்காணிக்க தவறியதற்கும், மேலும் புகார் அளித்ததால் புளியங்குடி நகராட்சி மூலம் தனக்கு மிரட்டல் விடப்பட்டுள்ளதற்கும். நகராட்சிக்கு நிதியிழப்பு காரணத்திற்கும் புளியங்குடி நகராட்சி பொறியாளர் மற்றும் உரிய அலுவலர்கள் மற்றும் மிரட்டல் விடுத்த பணியாளர் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி தனது முறையீட்டு மனுவில் தெரிவித்துள்ளார்".

(2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 16.07.2022 நாளிட்ட கடிதம் மூலம் புளியங்குடி நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது. ஆனால் புளியங்குடி நகராட்சி ஆணையர், மனுதாரரின் புகார் மனு குறித்தான தனது விளக்க அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்கவில்லை.

(3) மனுதாரரும் மற்றும் புளியங்குடி நகராட்சி ஆணையரும் 13.10.2022 அன்று தென்காசி முகாமில் நடைபெறும் விசாரணையில் ஆஜராகுமாறு 06.10.2022 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

(4) மனுதாரர் திரு.G.சக்திவேல்சாமி, 13.10.2022 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி பின்வருமாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

''தென்காசி மாவட்டம், புளியங்குடி நகராட்சியில் மேற்கொள்ளப்படும் திட்டப்பணிகளில் ஒரு சிலவற்றை தவிர மற்ற பணிகள் அனைத்தும் தரமற்றதாகவே உள்ளன. புளியங்குடி பேருந்து நிறுத்தம் அருகில் உள்ள முப்புடாதி அம்மன் கோயில் தெருவில் தரமற்றதாக அமைக்கப்பட்ட வாறுகாலில் டிராக்டர் கவிழ்ந்து பெண் ஒருவரும் படுகாயமடைந்தது குறித்து 24.8.2020 நாளிட்ட பத்திரிகையிலும் செய்தி இடம்பெற்றுள்ளது. அரசு நலத் திட்டப் பணிகள் முறையாக செய்யாமல் தொடர்ந்து புளியங்குடி நகராட்சியினர் முறைகேடுகளில் ஈடுபட்டு வருகின்றனர். இது தொடர்பாக நகராட்சிக்கு புகார் மனுக்கள் என்னால் அனுப்பப்பட்டது. ஆனால், மனுவின் மீது நடவடிக்கை எடுக்காமல், நகராட்சியில் பம்ப் ஆப்பரேட்டர் திரு. மொட்டய்யன் என்பவர் மூலம் எனக்கு மிரட்டல் விடுத்துள்ளனர். எனவே, திட்டப் பணிகளை முறையாக கண்காணிக்கத் தவறிய அலுவலர்கள் மீதும், எனக்கு மிரட்டல் விடுத்த நகராட்சிப் பணியாளர் மொட்டய்யன் என்பவர் மீதும் நடவடிக்கை எடுக்கும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் தரமற்ற பணிகளை மேற்கொண்ட ஒப்பந்ததாரரின் ஒப்பந்தத்தை இரத்து செய்திடவும், இவ்வாறு தரமற்ற முறையில் பணிகளை மேற்கொள்ளும் பொறியாளர்கள் மீது தேவையான நடவடிக்கை எடுத்திடவும் ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(5) எதிர்மனுதாரான புளியங்குடி நகராட்சி ஆணையாளர் திருமதி. மா. சுகந்தி மற்றும் நகராட்சி பொறியாளராகப் பணிபுரியும் திரு.P.முகைதீன் அப்துல் காதர் ஆகிய இருவரும் 13.10.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்கள்:

''மனுதாரர் தனது மனுவில் தென்காசி மாவட்டம், புளியங்குடி நகராட்சி பேருந்து நிறுத்தம் அருகில் உள்ள முப்புடாதி அம்மன் கோயில் தெருவில் அமைக்கப்பட்டுள்ள வாறுகாலை சீரமைத்து போடப்பட்ட சாலை குறித்து மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்றத்திற்கு அனுப்பியுள்ள மனுவினைத் தொடர்ந்து, மேற்கண்ட வாறுகால் எங்களால் ஆய்வு செய்யப்பட்டது. வாறுகாலில் கழிவு நீர் தடையின்றி செல்கிறது. எனினும், மேற்கண்ட பணியை மறுபடியும் ஆய்வு செய்து பணியின் தரத்தை அறிந்து மூன்றாம் நபரிடமிருந்து உரிய ஆய்வு அறிக்கை பெற்று தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். தவறு இருக்கும்பட்சத்தில் மேற்கண்ட ஒப்பந்ததாரரை தகுதி நீக்கம் செய்யப்படும் என தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும், மேற்காணும் ஒப்பந்ததாரருக்கு மேற்கண்ட பணியை முடித்ததற்கு முதல் பகுதி பட்டியல் தொகை வழங்கப்பட்டுள்ளது. முழுமையான தொகை இன்னும் வழங்கப்படவில்லை என்பதையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்'' என தெரிவித்துள்ளனர்.

**(6)** முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், புளியங்குடி நகராட்சி ஆணையர் மற்றும் நகராட்சி பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

- தென்காசி மாவட்டம், புளியங்குடியைச் சார்ந்த மனுதாரர் திரு.G.சக்திவேல்சாமி என்பவர் தனது முறையீட்டு மனுவில், புளியங்குடி நகராட்சிக்குட்பட்ட முப்புடாதி அம்மன் கோவில் தெருவில் தரமற்ற வாறுகால் அமைக்கப்பட்டதால், டிராக்டர் வாகனம் கவிழ்ந்து பெண்மணி ஒருவர் படுகாயம் அடைந்தார் என புகாராக தெரிவித்து, இப்புகாருக்கு உரிய அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டியும் புளியங்குடி நகரட்சியில் புகார் மனு அளித்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும், மாறாக நகராட்சி பணியாளர் மூலம் மனுதாரருக்கு மிரட்டல் விடப்பட்டதாகவும் புகாராக தெரிவித்துள்ளார்.

- மனுதாரர் புகாராக தெரிவிக்கும் தரமற்ற வாறுகால் அமைக்கப்பட்டது குறித்தான செய்தியானது **24.08.2020** நாளிட்ட நாளிதழில் இடம் பெற்றுள்ளது.

- மேற்காணும் விபத்து நடந்த வாறுகால் அமைக்கப்பட்டது தொடர்பான விவரங்களையும், விபத்து ஏற்பட காரணமானவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கக் கோரி மனுதாரர் செப்டம்பர் **2020** ஆம் ஆண்டிலேயே புளியங்குடி நகராட்சி அலுவலகத்திற்கும் மற்றும் திருநெல்வேலி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகத்திற்கும் மனுக்கள் அனுப்பியுள்ளார் மற்றும் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் இதுபற்றி தகவல் கோரியும் மனுதாரருக்கு எவ்வித பதிலும் அளிக்கப்படாமல் இருப்பது ஆவணத்தின் மூலம் தெரியவருகிறது. இச்செயலானது நகராட்சி நிர்வாக அலுவலர்களின் அலட்சியப் போக்கினையே காட்டுகிறது.

- மாறாக, ஒய்வு பெற்ற அரசு அலுவலரான மனுதாரருக்கு புகார் மனு தொடர்பான விளக்கத்தினை அளிப்பதற்கு பதிலாக முன்னாள் நகராட்சி பொறியாளர் மூலம் நகராட்சி பணியாளர் பம்ப் ஆப்பரேட்டர் திரு. மொட்டையன் என்பவர் மனுதாரரை மிரட்டியுள்ள சட்டவிரோத செயலானது ஏற்றுக் கொள்ளக்கூடிய செயல் அல்ல. இதனை இம்முறைமன்ற நடுவம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறது.

- நகராட்சிக்கு அவப்பெயர் உண்டாகும் வகையில் சட்டத்திற்கு விரோதமாக மனுதாரரை மிரட்டிய நகராட்சி பணியாளரான பம்ப் ஆப்பரேட்டர் திரு.மொட்டையன் என்பவரை உடனடியாக தொலைதூர நகராட்சி அலுவலகத்திற்கு பணியிட மாற்றம் செய்யுமாறு நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு பரிந்துரை செய்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

- மேலும் தரமற்ற வாறுகால் அமைக்கப்பட்டதற்கும் மற்றும் நகராட்சி பணியாளரை தூண்டி மனுதாரரை மிரட்டிய பொறுப்பற்ற செயலுக்கு காரணமான சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கையினை எடுக்குமாறும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார். மனுதாரரின் புகார் மனு மீதான விளக்க அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பிக்க தவறிய சம்பந்தப்பட்ட புளியங்குடி நகராட்சி ஆணையரின் செயலினை இம்முறைமன்ற நடுவம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறது.

- புளியங்குடி, முப்புடாதி அம்மன் கோவில் தெருவில் அமைக்கப்பட்டுள்ள வாறுகாலின் தரம் குறித்த ஆய்வறிக்கையினை பெற்று, வாறுகால் எவ்வித புகாருக்கும் இடமில்லாமல் தரமுடன் அமைக்கப்பட்டுள்ளது என்பதனை உறுதி செய்த பின்னரே ஒப்பந்ததாருக்கு வழங்க வேண்டிய முழுமையான தொகை ஒப்பளிப்பு செய்யப்பட வேண்டும் என புளியங்குடி நகராட்சி ஆணையாளரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

The inaction and indifference of the former Municipal Commissioners are censured severely by this Forum. The act of sending one Mottayyan, Pump Operator to harass the petitioner by the Municipality is shocking. Whether the Municipal Commissioner is an administrator to focus on the local bodys' all-round Municipal management or sending his field level workers as henchmen to threaten petitioners is deeply rueful. A retired Government Engineer did not deserve this kind of shabby treatment at the hands of a Municipal Pump Operator. The former Municipal Commissioner should have checked up the quality of the execution of drainage work on receipt of a complaint instead and remedial measures ought to have been taken. But this does not appear to have been done.

The Director of Municipal Administration is instructed to pursue necessary disciplinary action against all the concerned in the issue and send an action taken report to this office within 3 months.

2022 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 30–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு.G.சக்திவேல் சாமி,
89, அரசடி விநாயகர் கோவில் தெரு,
T.N.புதுக்குடி, புளியங்குடி 627 855,
தென்காசி மாவட்டம்.
2) ஆணையாளர், புளியங்குடி நகராட்சி,
தென்காசி மாவட்டம்.
3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.
4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

31/10/22.

செயலாளர்

31/10/22

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
சென்னை–600 032